செ.வெ.எண்: 310

நாள். 06.07.2017

பத்திரிக்கைச் செய்தி

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் கோட்டத்தில் (மதுராந்தகம், செய்யூர்) 18 கிராம உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது.

மதுராந்தகம் வட்டத்தில் புதுப்பட்டு, இருசாமநல்லூர், வேடவாக்கம், அகிலி, கழனிப்பாக்கம், கரிக்கிலி, பசுவங்கரணை, வீராணக்குண்ணம், வெள்ளப்புத்தூர், வேலாமூர், முன்னங்குளம் ஆகிய 11 கிராமங்களும், செய்யூர் வட்டத்தில் போரூர், விளாம்பட்டு, கொக்கரந்தாங்கல், வேம்பனூர், புறஞ்சேரி, வேப்பஞ்சேரி, கொடூர் (மடவிளாகம்) ஆகிய 7 கிராமங்களும் ஆக மொத்தம் 18 கிராமங்களில் கிராம உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

இப்பணியிடங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் நேரடி நியமனம் மூலம் இடம் ஒதுக்கீடு அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. கல்வித்தகுதி 5-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மதுராந்தகம் உட்கோட்டத்தைச் சேர்ந்த மனுதாரர்கள் அவரவர் சம்மந்தப்பட்ட வட்டத்தில் நிரந்தரமாக குடியிருக்க வேண்டும். 01.07.2017 தேதியில் எஸ்.சி, எஸ்.டி பிரிவினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 21 வயது முதல் 35 வயதுக்குள்ளும் இதர பிரிவினருக்கு 21 வயது முதல் 30 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்று, இருப்பிட ஆதாரம், சாதிச்சான்று மற்றும் புகைப்பட நகல்கள் இணைக்கப்பட வேண்டும். மேலும் விதவைச்சான்று, மாற்றுத்திறனாளிச்சான்று மற்றும் முன்னுரிமை சம்மந்தப்பட்ட சான்றுகள் ஏதேனுமிருப்பின் தேவைக்கேற்றபடி இணைக்கப்படவேண்டும். மேற்படி விண்ணப்பங்கள் 20.07.2017-க்குள் சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

H.Chandrasekhar 4/7/17

சார் ஆட்சியர்,
மதுராந்தகம்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.